பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 18 | வியாழக்கிழமை | 29.01.2025 | அதிர்வு 181

## அர்ச்சுனாவுக்குப் பிணை



(எஸ்.நிதர்ஷன்)

பொலிஸாரால் கைது

06




# தமிழரசின் மூத்த தலைவர் சேனாதிராஜா காலமானார்

## ஞாயிறன்று மாவிட்டபுரத்தில் இறுதிக்கிரியை

(எஸ்.நிதர்ஷன்)

தமிழினத்தின் விடுதலைக்காக அஹிம்சை வழியில் இறுதி வரை அயராது போராடிய தலைவர் - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா (வயது 82) நேற்று இரவு காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் தற்போதைய அரசியல் குழுத் தலைவருமான மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று இரவு 10 மணியளவில் காலமானார்.

05

## மாவையின் வரலாறு

அமரர் மாவை சேனாதிராஜாவின் இயற்பெயர் சோமசுந்தரம் சேனாதிராஜா. அவரின் சொந்த ஊர் மாவிட்டபுரம் என்பதால் ஊரின் பெயருடன் மாவை சேனாதிராஜா என அழைக்கப்பட்டார்.

அவர் யாழ்ப்பாணம் மாவட்டம், மாவிட்டபுரத்தில் 1942 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் தியாகி

05




இலங்கைத் தமிழரசுக் கட்சியில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பொதுச் செயலாளராகவும், பத்து ஆண்டுகளுக்கு மேல் தலைவராகவும் பணியாற்றிய மாவை சேனாதிராஜா நேற்றிரவு மறைந்தார். நீண்ட நெடும் அரசியல் பயணம் ஒன்று முடிவுக்கு வந்திருக்கின்றது. 'விடுதலை', 'போராட்டம்' என்ற அவரின் சொல்லாடல்களை இனிமேல் நாம் கேட்கமுடியாது.

அவரைச் சுற்றி அரசியல் செய்து வந்த பலருக்கு அவரது மறைவு நட்டாற்றில் விட்ட நிலையைத் தந்திருக்கும் என்பது கண்கூடு.

ஆயினும், அவரது பிரிவை வைத்தும் கடைசி நேர அரசியலை முன்னெடுக்கும் கைங்கரியம் நகராமல் இருக்கப் போவதில்லை என்று தோன்றுகின்றது. அடுத்து வரும் தினங்களில் அதனை நாம் காணக்கூடியதாக இருக்கலாம்.

அவர் ஏழு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அதேசமயம், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஆரம்ப கட்டத்தில் அதற்காக சிங்களப் படைகளினால்

05




# மன்னார் நீதிமன்றின் முன் நடந்த சூட்டுச் சம்பவம் கைதான ஐவருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

## நேற்றுக் கைதானவர் பொலிஸ் விசாரணையில்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்றுப் புதன் கிழமை உத்தரவிட்டார்.

மேலும் நேற்றைய தினம் புதன் கிழமை கைது செய்யப்பட்ட மேலும் ஒரு சந்தேக நரை இன்று வியாழக்கிழமை 30 ஆம் திகதி வரை பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அதேசமயம் நேற்றுப் புதன்கிழம. இவ்விடயத்தை ஒட்டி மன்னார் நீதி மன்றத்தின் மூடிய அறைக்குள் தனித் தனியாக அடையாள ஆள் அணி வகுப்பு இடம்பெற்றது.

இந்த நிலையிலே ஏற்கனவே கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்தமையோடு,பெண் ஒருவர் உள்ளடங்கலாக இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கையின் போது பிரதான சந்தேக நபர்கள் உள்ளடங்கலாக 5 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் இராணுவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அடங்குகின்றனர்.

ஐந்து பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டனர். இதன் போது நீதவான் அந்த 5 சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.







# மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதத்தில் மாற்றமில்லை




மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதத்தை தற்போதைய வட்டி வீதத்திலேயே பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதிச்சபை கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியிள் ஒரு நாள் கொள்கை வட்டி 8 வீதமாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை குறைக்க முடியாது: வஜிர அபேவர்த்தன

அரமைப்பின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை இரத்துச்செய்யவோ குறைக்கவோ முடியாது. அதனால் செய்ய முடியாத விடயங்களை அரசாங்கம் வெளியில் தெரிவிக்காமல் இருப்பது நல்லது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலி ஹினிதும தேர்தல் தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அரசியல் சபை கூட்டம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலே கதைத்து வருகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம் தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உத்தியோகபூர் வீடு தொடர்பில் பல்வேறு கதைகளை தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் இந்த விடயங்களை அரசாங்கம் வெளியில் தெரிவிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

அரசமைப்பின் 36 (2) உறுப்புரையில், யாராவது ஒருவரினால் ஜனாதிபதி பதவி ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கும் அதன் பின்னர் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறுவதற்கும் அந்த நபர் உரிமையுடையவராவார்.

பின்னர் இந்த அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் திருத்தம், இந்த அரசியலமைப்பு முழுமையாக நீக்கப்படுதல் அல்லது மறுசீரமைப்பு செய்தல் மற்றும் இந்த அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயம் ஒன்று பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு சட்டம் அல்லது சட்டத்தில் சில விதிமுறைகள் கடந்த காலத்துக்கு செல்லுபடியாகாது. அதாவது எந்த ஜனாதிபதியினதும் உரிமைகளை இல்லாமலாக்க முடியாது.

அதேபோன்று ஜனாதிபதி பதவியை வகிக்கும் நபர். சம்பளம் அல்லது கொடுப்பனவு ,ஓய்வூதிய கொடுப்பனவு



உரித்துரிமைகளை பாராளுமன்ற பிரேரணை ஒன்றின் மூலம் அதிகரித்துக்கொள்ள முடியும்.

என்றாலும் அந்த சம்பள கொடுப்பனவு ஓய்வூதிய உரித்துரிமைகளை குறைக்கக்கூடாது என்றே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த விடயங்களை சரியாக வாசித்திருந்தால் அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் காலத்தை வீணாக்க தேவை இருந்திருக்காது.


மேலும் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் 25 தடவைகள் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்து வருகிறார்கள்.

அவர் நட்டை பொறுப்பேற்றுக்கொண்டு வீடடங்கி இருக்கவில்லை. அவர் நாட்டை பொறுப்பேற்று, நாட்டை கட்டியெழுப்ப முழு மூச்சுடன் செயற்பட்டு வந்தார்.

சர்வதேசத்துக்கு சென்று இந்த பிரச்சினைகளுக்கு தீர்வை தேடினார். அவர் செய்த அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியின் பெறுபேற்றினால்தான் வரிசைகளில் இருந்த மக்கள் வீடுகளுக்கு சென்றார்கள்.

அதனால்தான் வங்குரோத்து அடைந்திருந்த இந்த நட்டை ஒரு நிலைக்கு கொண்டுவந்திருக்கிறது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களை வெளியில் வந்து சொல்லிக்கொண்டிருக்கவில்லை. அதனால் இன்றைக்கும் இந்த நாட்டை பாதுகாக்க முடியுமான தேசிய தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமாகும் என்றார். என்றார்

# யோஷித்த ராஜபக் ஷவுக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகளை மீள ஒப்படைக்குமாறு அறிவித்தல்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகளில் எஞ்சிய 2 துப்பாக்கிகளையும் மீள ஒப்படைக்குமாறு அறிவித்துள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தனிநபர்களிடம் அனுமதிப்பத்திரத்துடன் கூடிய 1,697 துப்பாக்கிகள் உள்ளன.

அத்துடன், துப்பாக்கிக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற நபர்களின் எண்ணிக்கை 1,550 என தரவுகள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய, எண்ணிக்கை சரிபார்ப்பு நடவடிக்கைகளுக்காக அவற்றில் 1,368 துப்பாக்கிகள் அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கை சரிபார்ப்புக்காக 182 துப்பாக்கிகள் ஒப்படைக்கப்படாமல் உள்ளன.

அவ்வாறு துப்பாக்கிகளை ஒப்படைக்காத நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, யோஷித்த ராஜபக்ஷவிடம் சுமார் 6 துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்ததாகவும், அவற்றில் இரண்டு துப்பாக்கிகள் மீள ஒப்படைக்கப்படவில்லை எனவும் அதனை ஒப்படைக்குமாறு அவருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவின் மீளாய்வின் பின்னரே துப்பாக்கிகளை மீள வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் பட்டியலை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்: சமன் ஸ்ரீ ரத்நாயக்க

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடத்துவதற்கு தாம் தயாராக உள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வாக்காளர் பட்டியலை டிஜிட்டல் மயமாக்கும் நாடளாவிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெயர்களை அச்சிடல் முறையில் பெறுவதற்குப் பதிலாக, 14,000 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இந்த டிஜிட்டல் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

காகிதத்தில் தரவுகளைப் பதிவு செய்வதற்குப் பதிலாக, இணையவழி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் பெயர் பதிவேடு தயாரிக்கப்படுகின்றது.

எதிர்வரும் தேர்தல்கள், 2024 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடத்தப்படும் என்றும் கடந்த முதலாம் திகதிக்குள் 18 வயதை அடைந்த இளைஞர்களும் புதிய பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.



பரீட்சைகள் காரணமாக மார்ச் மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது சிக்கலாக இருக்கும் என்பதால், தீர்மானங்கள் எடுக்கப்பட்டதன் பின்னர் ஏப்ரல் மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முடியும்.

கடந்த பொதுத் தேர்தலின் போது சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகள் மற்றும் வருமான, செலவு அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது." என்றார்.

# விசேட நிதி இணக்க சபையை நிறுவுவதற்கு தீர்மானம்!

விசேட நிதி இணக்க சபை ஒன்றை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிதி தொடர்பான பிரச்சினைகளை நீதிமன்றுக்கு கொண்டு செல்வதற்கு முன்பாக அவற்றை தீர்ப்பதற்கு குறித்த இணக்க சபை நிறுவப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, முதல் கட்டமாக கொழும்பு, கம்பஹா, கண்டி, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் குறித்த விசேட நிதி இணக்கச் சபை நிறுவப்படவுள்ளது.

அதற்காக விசேட துறைசார் நிபுணர்கள் நியமிக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டு சித்திரவதைகளை எதிர்கொண்டவர். ஏழாண்டுகள் வரை சிறைவாசம் அனுபவித்தவர்.

மாவை சேனாதிராஜாவின் கடந்த 15 ஆண்டுகால தலைமைத்துவம் சர்ச்சைக் குரியதாக இருந்தாலும் ஒரு விடயம் நிச்சயம் குறிப்பிட்டாக வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அவருக்கும் இடையிலான ஊடாட்டங்கள் ஏற்றம் இறக்கம் மிக்கவை.

ஆயினும், தலைவர் பிரபாகரனினால் பெரிதும் மதிக்கப்பட்ட ஓர் அண்ணனாக மாவை சேனாதிராஜா விளங்கினார் என்பதை நான் நன்கு அறிவேன்.

தந்தை செல்வாவின் வழியில் – காந்திய நெறியில் – தமிழர்களின் உரிமைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட சமயத்தில், அதனால் பயனில்லை, அடுத்த கட்டத்திற்கு – ஆயுதப் போராட்டத்திற்கு – நகர்வது குறித்து சிந்திக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்ட போது அந்தச் சந்ததியில் முதலில் துணிந்து முன்னிலைக்கு வந்த ஒரு சில இளைஞர்களில் மாவை சேனாதிராஜா முக்கியமானவர்.

அதன் காரணமாக சிங்களப் படைகளினால் தேடப்படும் தமிழ் இளைஞர் பட்டாளத்தில் முதல் கட்டத்தில் இருந்தவர் அவர். அப்படி அவர் தேடப்பட்ட சமயத்தில், அவருக்கு தம்பியாக – உதவியாளனாக – தான் செயல்பட்டமை குறித்து தலைவர் பிரபாகரனே என்னிடம் ஒரு தடவை குறிப்பிட்டு இருக்கின்றார். அதனை மாவை அண்ணனைச் சந்தித்து நினைவூட்டிக் கேளுங்கள் என்று அவர் குறிப்பிட்டமையும், அடுத்த வாரம் கொழும்பில் மாவை சேனாதிராஜாவை சந்தித்து அந்த விடயங்களை நான் குறிப்பிட்டபோது அதுபற்றிய மேல் விவரங்களை மாவை சேனாதிராஜா அவர்கள் என்னுடன் பகிர்ந்து கொண்டமையும் எனக்கு இன்னும் நினைவில் உண்டு.

ஆரம்பத்தில் இருந்த அந்த ஒட்டுறவு, பின்னர் மாவை சேனாதிராஜாவின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்போக்குக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எண்பதுகளின் பிற்பகுதியில் கசப்புணர்வு கட்டத்தை எட்டிய போது சற்று விலகிப் போனமையையும் நான் அறிவேன்.

ஆயினும் புதிய மில்லியேனியம் பிறந்த காலகட்டத்தில் இருந்து, தமிழீழ யுத்தம் முடிவடையும் வரையான காலத்தில் தலைவர் பிரபாகரனால் பெரிதும் மதிக்கப்பட்ட மிதவாதத் தலைவராக மாவை சேனாதிராஜா விளங்கினார் என்பது மெச்சப்பட வேண்டிய உண்மை.

ஆயினும், ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் சம்பந்தன் – மாவை தலைமைகள் வழங்கிய வழிகாட்டல் காத்திரமான பெறுபேறுகளை பெற்றுத் தரவில்லை என்பதும் கசப்புணர்வான உண்மைதான். இக்கால கட்டத்தில் மாவை சேனாதிராஜாவின் அணுகுமுறைகள், எதிர்பார்ப்புகள், செயற்பாடுகள் கடும் விமர்சனத்திற்கும் அதிருப்திக்கும் கூட உள்ளாகின.

அவரோடு நெருங்கி பழகிய ஒரு தொண்டர் நேற்றிரவு கூறிய ஒரு விடயத்தையும் இச்சமயத்தில் குறிப்பிட்டு இக்குறிப்பை முடிக்க விரும்புகிறேன்.

“அவரை நம்பி இருந்த பலரை அவர் கண்டு கொள்ளவில்லை. அல்லது கைவிட்டார். அவர் நம்பியிருந்த பலர் அவரைக் கைவிட்டு விட்டனர்.”– இதுதான் அந்தத் தொண்டர் சொன்ன விடயம்.

அது உண்மையா, சரியா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

## தமிழரசின் மூத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் அதிகாலை வீட்டில் தவறி தலை அடிபட வீழ்ந்த மாவை சேனாதிராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்.

சி.ரி. ஸ்கான் பரிசோதனையில் அவரின் தலையில் கணிசமான அளவில் இரத்தப் பெருக்கு இருப்பதை வைத்திய நிபுணர்கள் கண்டறிந்தனர்.

அவருக்கு மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக ஆபத்தான நிலையில் செயற்கைச் சுவாச உதவியுடன் சிகிச்சை பெற்று வந்திருந்தார். இந்நிலையில், நேற்று இரவு அவர் சிகிச்சை பலனின்றி காலமானார் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

அன்னாரின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மறைந்த மாவை சேனாதிராஜாவின் இறுதிக்கிரியை நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## மாவையின் வரலாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிறந்தார். வீமன்காமம் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், நடேஸ்வராக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் அவர் கற்ற பின்னர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் செயற்பட்டு 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தந்தை செல்வாவுடன் பங்குபற்றினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் 1962 இல் இணைந்தார்.

1966 முதல் 1969 வரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

1969 முதல் 1983 வரையான காலப் பகுதியில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு, வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகளில் மொத்தம் ஏழாண்டுகள் சிறையில் கழித்தார்.

1977 இல் மாவை சேனாதிராஜா மணமகளாக தமது உறவு முறை பவானி என்பவரைத் திருமணம் முடித்தார்.

1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார்.

1989 நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகிய கட்சிகளுடன் சேர்ந்து தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிட்டபோதும் அதில் தெரிவாகவில்லை.

அதன் பின்னர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989 ஜூலை 13இல் கொழும்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமையை அடுத்து அவரின் இடத்துக்கு மாவை சேனாதிராஜா தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அந்தத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூடுதலாக அம்பாறைக்கே அவர் பயன்படுத்தினார்.

பலருக்கு அம்பாறை மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், துறைமுக அதிகாரசபை நியமனங்களை பெற்றுக்கொடுத்தமையுடன் பன்முகப்படுத்தப்பட் நிதியை அம்பாறை மாவட்டத் தமிழ் கிராமங்களுக்கே அவர் ஒதுக்கியும் இருந்தார். பெரியநீலாவணை வைத்தியசாலை இவருடைய பன்முகப் படுத்தப்பட்ட நிதி மூலம் கட்டடம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1994 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி மூலமாகத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவர் தெரிவாகவில்லை.

1999 ஜூலை 29 இல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றார்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2001 ஒக்டோபர் 20 இல் தமிழர் விடுதலை கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுவிய பின்னர் 2001 தேர்தலில் யாழ். மாவடத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழர் விடுதலை கூட்டணி 15 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 14 பேர் விடுதலைப்புலிகளைத் தமிழர்களின் ஏகபிரதிநிதியாக ஏற்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாடாளுமன்றக் குழு கூட்டஎடுத்தபோது – ஆனந்தசங்கரி அதை ஏற்கமுடியாது என முட்டுக்கட்டை போட்ட போது – மாவை விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அதன்பின்னர் 2004, 2010, 2015, தேர்தல்களில் மீண்டும் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார்.

2020 தேர்தலில் போட்டியிட்டும் 29 ஆயிரத்து 358 வாக்குகளைப் பெற்றும் அவர் தெரிவாகவில்லை.

தமிழரசுக்கட்சி பொதுச்செயலாளராக 2004 தொடக்கம் 2014 வரையும் பதவி வகித்தார். பின்னர் வவுனியாவில் 2014 யில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

2024 பொதுத்தேர்தலின் போது கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் தலைவர் பதவியில் இருந்து தான் விலகுகின்றார் என அறிவித்தார்.

கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் 2024 டிசம்பர் 28 இல் வவுனியாவில் இடம்பெற்றபோது அந்தக் கூட்டத்தில் கட்சியின் பதில் தலைவர் 06


## காணி விற்பனைக்கு

சுழிபுரம் மூளாய் பகுதியில் சுற்று மதிலுடன் 10 பரப்பு காணியில் அமைந்த 4 அறைகள் 2 குளியல் அறைகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு :-**
**+94 772378718**

# நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது



நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் காற்றின் தரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வரும் மாசு நிறைந்த வளியினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

இதன் காரணமாக சுவாச நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், பொதுமக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.



# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

முல்லேரியா – உடஹமுல்ல பகுதியில் போதைப் பொருள் விற்பனையுடன் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பதில் பொலிஸ் மாஅதிபரின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ள போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 2 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனை மூலம் பெறப்பட்டதாக கூறப்படும் 667,000 ரூபா பணம், கார், 3 தொலைபேசிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் முல்லேரியாவைச் சேர்ந்த 41 வயதானவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரினால் குறித்த சந்தேகநபர் வழிநடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அர்ச்சுனாவுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று இரவு அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா நேற்று மாலை சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் நாடாளுமன்றம் சென்ற நிலையில் தனது வாகனத்தில் அங்கீகரிக்கப்படாத வி.ஐ.பி. விளக்குகளைப் பயன்படுத்தியதற்காக ரம்பேவ பகுதியில் வைத்து அர்ச்சுனா எம்.பி. பொலிஸாரால் வழி மறிக்கப்பட்டார்.

எனினும், அவர் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இது தொடர்பான காணொளியும் வெளியாகி இருந்ததுடன் பொலிஸ் அதிகாரிகளை அவர் திட்டியதும் காணொளியில் பதிவாகியிருந்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் நேற்று இரவு அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## மாவையின் வரலாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவி சி.வி.கே.சிவஞானத்துக்கு வழங்கப்பட்டது. மாவைக்கு அரசியல் குழு தலைவர் பதவி வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் கடந்த 2014 செப்டம்பர் 07 தொடக்கம் 2024, டிசம்பர் 28 வரையும் ஏறக்குறைய 10 வருடங்கள் தலைவராகவும், அதற்கு முன்னர் 2004 தொடக்கம் 2014 வரை 10 வருடங்கள் பொதுச்செயலாளராகவும் அவர் பதவியில் இருந்துள்ளார்.

# சைபர் பாதுகாப்பு மையத்தை ஸ்தாபிப்பதற்கு தீர்மானம்





சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு மையத்தை ஸ்தாபிப்பதற்கு இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தீர்மானித்துள்ளது.

அரச நிறுவனங்களின் வலைத்தளங்களை சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் குறித்த மையம் நிறுவப்படவுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு மையத்தினால் தெரிவு செய்யப்பட்ட 40 அரச நிறுவனங்களின் வலைத்தளங்களை சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் செயற்பாடு முதற்கட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது.

# போராட்டம் நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி மனு

## அர்ச்சுனா எம்.பிக்கு அழைப்புக் கட்டளை



(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின்யாழ்ப்பாணம்வருகையின்போதுபோராட்டம் நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பொதுமக்கள் சந்திப்பு எனச் சில நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நாளை வெள்ளிக்கிழமை யாழ். வருகின்றார்.

ஜனாதிபதியின் வருகையின்போது போராட்டம் நடத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவும், வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தினரும் அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்நிலையில் போராட்டம் நடத்துவதைத் தடை செய்யக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட ஐவரை இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை அனுப்ப யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தடை உத்தரவு தொடர்பான மனு மீதான விசாரணை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

# எதிரணிகள் ஓரணியில்



நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் குரலை மேலும் மேலோங்கச் செய்து, வலுவான எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், அனுராத ஜயரத்ன, இரா.சாணக்கியன, ஜே.சி. அலவத்துவல, அஜித் பி. பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுவயது கர்ப்பம்

இலங்கையில் இளம் கர்ப்பங்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 213 ஆக உயர்ந்துள்ளதாக சிறுமிகள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பான புலனாய்வுப் பணியகத்தின் தலைவரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜெயசுந்தர தெரிவித்திருக்கின்றார்.

2023ஆம் ஆண்டில் 167 என்ற எண்ணிக்கையில் இருந்து 2024 இல் 213 ஆக சிறுவயது கர்ப்பங்கள் அதிகரித்துள்ளன என்ற புள்ளிவிவரத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

சிறு வயதுக் கர்ப்பம் என்பது பதினெட்டு வயதுக்கு குறைந்த ஒரு சிறுமி, தான் விரும்பியோ அல்லது விரும்பாமலோ கர்ப்பம் தரித்தலுக்கு உள்ளாகுவதாகும். இது இள வயது கர்ப்பம் அல்லது இளமைப் பருவ கர்ப்பம் என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது 18 வயதுக்குட்பட்ட பெண் கர்ப்பமாக இருக்கும் சூழ்நிலையைக் குறிக்கிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினையாக கருதப்படுகிறது.

"பதினாறு வயதுக்குட்பட்ட பெண்கள் காதல் ஊடாட்டங்களுக்குப் பின்னர் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவது மிகவும் பொதுவாகப் பதிவாகும் குற்றமாகும். இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாதிக்கப்படும் சிறுமியின் சம்மதத்துடன்தான் நிகழ்கிறது. ஆயினும் அது குற்றமே." - என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

நாளைய உலகை காண்பதற்கு இன்றே தயாராகிக்கொண்டிருக்கும் சிறுவர்கள் மகிழ்ச்சியை மட்டுமல்லாது, கசப்பான அனுபவங்களையும் வடுக்களையும் சுமந்துகொண்டே எதிர்காலத்தை எதிர்கொள்கின்றனர். இதுதான் யதார்த்தப் புறநிலை.

உலகளாவிய ரீதியில் சில ஆண்டுகளுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றின் புள்ளிவிவரப்படி 13 வீதமான சிறுமிகள் 18 வயதை அடைவதற்கு முன்னரே கர்ப்பம் தரித்து குழந்தை பிரசவித்துள் ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளை மிரட்டும் இந்த விடயத்தின் பாதிப்பு இலங்கையிலும் இல்லாமலில்லை.

சிறுவர்களின் முக்கியத்துவம், அவர்களின் நலன்கள் மற்றும் அவர்களின் தேவைகள் பற்றிய புரிதல் சமூக மட்டத்தில் இல்லாமல் இருப்பதே இப்பிரச்சினைக்குப் பிரதான காரணியாகும். அத்தோடு பெற்றோர்கள் பிள்ளைகள் மீது முழுமையான அக்கறை செலுத்தாமல் இருப்பதும் சிறுவர் கர்ப்பங்கள் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாகும்.

சிறுவர்கள் உடலளவிலும் மனதளவிலும் மென்மையானவர்கள். அவர்களுக்கு கரு தரித்து குழந்தையை சுமந்து பிரசவிப்பதற்கான வலிமை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் காணப்படுவதில்லை. அதற்கு அவர்களது உடல் தயாராகவும் இல்லை. அவ்வாறு இருக்கும் சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் கர்ப்பம் தரித்து குழந்தையை பிரசவிக்கும்போது அது தாய், சிசு இருவரையும் அதிகம் பாதிக்கும் அபாயம் உண்டு.

சமூகத்தின் மத்தியில் சிறுவர்கள் பற்றிய விழிப்புணர்வு இன்மையே சிறுவர் கர்ப்பங்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும். பெற்றோர்கள் பிள்ளைகள் மீது முழுமையான அக்கறை செலுத்த வேண்டும். அவர்களின் நேரடி மற்றும் நேரலை செயற்பாடுகளை கண்காணித்து அதில் சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேச வேண்டும். அவ்வாறு செயற்படும்போது குற்றமிழைப்பவர்களின் பிடியில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்திட முடியும்.

# அவதூறுகள் எம்மை அசைத்து விடாது ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தெரிவிப்பு



"அவதூறுகள் எம்மை அசைத்து விடாது" எனத் தெரிவிக்கும் அறிவிப்பு ஒன்றை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஆழமாக ஊடுருவி எமது சமூகக் கட்டமைப்புக்களையும் எதிர்கால சந்ததியையும் சீரழித்துக் கொண்டிருக்கும் போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் எமது பணியாளர் ஒருவர் கைது செய்யப் பட்ட செய்தி ஒரு சில ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் திரித்தும் இட்டுக் கட்டியும் வெளியிடப்படுகிறது.

இப்படியான சேறடிப்புக்கள் எனக்கும் எமது கட்சிக்கும் புதிய ஒன்று அல்ல.

இந்தச் சம்பவம் தொடர்பான சில தெளிவுபடுத்தல்களை எமது மக்களுக்கு வழங்க வேண்டிய தார்மீக கடப்பாடு இருப்பதாக உணர்கின்றேன்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிப் பகுதியில் போதைப் பொருள் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைஞனும், அவரது சகோதரனும், தாய் தந்தையை இழந்த அனாதரவான நிலையில் சில வருடங்களுக்கு முன்னர் என்னை அணுகி தங்களின் வாழ்வியல் அவலத்தை வெளிப்படுத்தி என்னிடம் உதவி கேட்டிருந்தனர்.

பெற்றோரை இழந்த பிள்ளைகள் எதிர்கொள்ளக்கூடிய அவலங்களை அறிந்தவன் என்ற அடிப்படையில், அவர்களுக்கான வேலை வாய்ப்பினையும் தங்குமிட வசதிகளையும் ஒழுங்குபடுத்திக் கொடுத்திருந்தேன்.

சில வருடங்களின் பின்னர் சம்மந்தப்பட்ட சகோதரர்கள் போதைப் பொருள் பாவனை, அது தொடர்பான செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்பதை அறிந்ததும், அவர்களை அதிலிருந்து மீட்டு நற்பிரஜைகளாக்குவதற்கான புனர்வாழ்வு பொறிமுறைகளுக்குள் அவர்கள் இணைத்து விடப்பட்டு, அதன் பின்னர் எமது கட்சித் தோழர்களால் அவதானிக்கப்பட்டும் வந்தனர்.

எனினும், எமது கண்காணிப்புக்களை மீறி அவர்கள் செயற்பட்ட நிலையில், குறித்த நபர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிரான சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை பொலிஸாருக்கு வழங்கி வருவதுடன், போதைப் பொருள் பாவனை முற்றாக எமது மக்கள் மத்தியிலிருந்து அழிக்கப்பட வேண்டும் என்ற எமது வலியுறுத்தலையும் வழங்கி இருக்கின்றோம்.

அதற்கப்பால், சில சமூக ஊடகங்களில் வெளியாவது போன்று, எமது வாகனத்தில் போதைப் பொருள் கடத்தப்பட்டது, சுற்றிவளைத்து பிடிக்கப்பட்டது போன்ற செய்திகளில் எந்தவித உண்மைகளும் இல்லை என்பதுடன், அவை எல்லாம், எம்மீதான வழக்கமான சேறடிப்புக்கள் என்பதையும் எமது மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். - என்று உள்ளது.

# பேராசிரியர் எஸ்.ரகுராம் மீண்டும் இன்று கலைப் பீடாதிபதி பொறுப்பை ஏற்பார்



யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் மீண்டும் இன்று பதவியேற்கவுள்ளார் எனப் பல்கலைக்கழக பேரவையால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையின் விசேட பொதுக்குழுக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்ற நிலையில், இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வகுப்பு நீக்கம் செய்யப்பட்ட சில மாணவர்கள் மீதான தடையை நீக்குவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின்னர், பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தனது பதவியிலிருந்து விலகுகின்றார் என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இது குறித்துக் கலந்துரையாடும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையின் விசேட பொதுக்குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதில், பேராசிரியர் ரகுராம் மீண்டும் இன்று பதவியேற்க வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதவி விலகிய கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராமிற்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்திருந்தமை தெரிந்ததே.




# மகா கும்பமேளாவில் 30 பேர் பலி: கூட்ட நெரிசல் ஏற்பட்டது எப்படி?

பிரயாக்ராஜில் நடந்து வரும் மகா கும்பமேளாவில் மவுனி அமாவாசையை முன்னிட்டு நேற்று புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர் என உத்தரப் பிரதேச பொலிஸ் தெரிவித்துள்ளது.

இவர்களில் 25 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 5 பேரை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருவதாக கும்பமேளா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட நேற்று புதன்கிழமை லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். இதனால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நடந்து 15 மணி நேரம் கடந்துவிட்ட நிலையிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை மாநில அரசோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ தெளிவாக தெரிவிக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில், 30 பேர் உயிரிழந்தனர் என நேற்று மாலையில் தெரிவித்தது.

இதுகுறித்து கும்பமேளா டி.ஐ.ஜி. வைபவ் கிருஷ்ணா கூறுகையில்,

“பிரம்ம முகூர்த்தத்துக்கு முன்பு சுமார் 1 இல் இருந்து 2 மணிக்கு அகாரா மார்க்கில் ஒரு பெரிய கூட்டம் கூடியது. இந்தக் கூட்டம் காரணமாக மறுபுறம் வைக்கப்பட்டிருந்த தடுப்புகள் உடைந்தது. இதனால் அக்கூட்டம் அப்படியே மறுபுறம் பிரம்ம முகூர்த்தத்தில் புனித நீராட காத்திருந்த பக்தர்கள் மீது விழுந்து மோதியது. இதன் காரணமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

ஏறத்தாழ 90 பேர் நோயாளர் காவுவண்டிகள் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 30 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 25 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 4 பேர் கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள், அசாம் மற்றும் குஜராத்தைச் சேர்ந்தவ தலா ஒருவர் இதில் உள்ளனர். 36 பேர் காயம் காரணமாக உள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது இயல்பு நிலை திரும்பி விட்டது. பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு, அனைத்து மகா மண்டலேஷ்வரர்கள், சாதுக்காள், அகாராக்கள் சற்று தாமதமாக புனித நீராடுமாறு முதல்வர் யோகி ஆதித்யநாத் கேட்டுக்கொண்டார். அகாராக்களின் அமிர்த ஸ்நானம் பாதுகாப்பாக முடிக்கப்பட்டது.” – என்றார்.



# தந்தை பெரியார் குறித்து சர்ச்சைப் பேச்சு; சீமான் மீது மேலும் ஒரு வழக்குப் பதிவு

தந்தை பெரியார் குறித்து இழிவாக பேசிய குற்றச் சாட்டில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது மேலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தந்தை பெரியார் குறித்து சீமான் தொடர்ச்சியாக சர்ச்சைக்குரிய கருத்துக்களை பொதுவெளியில் வெளியிட்டு வருகின்றார். இதனால்,– தந்தை பெரியாரின் ஆதரவாளர்கள் முதல் அரசியல் கட்சி தலைவர்கள் வரை சீமான் மீது கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் சீமானுக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் வழக்குகளும் தொடரப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தந்தை பெரியார் குறித்து இழிவாக பேசிய புகாரில்,சீமான் மீது சேலம் சூரமங்கலம் பொலிஸார் மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சமூக நீதிப் பேரவை என்ற அமைப்பு சார்பில் குறித்த புகார் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமான விபத்தில் 18 பேர் உயிரிழப்பு





தெற்கு சூடானில்நேற்று பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூடானின் வடபகுதியில் உள்ள ஆயில்பீல்டு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானத்தில் 21 பேர் பயணம் செய்தனர்.

இந்த விமானம் தெற்கு சூடானின் யூனிட்டி ஸ்டேட் பகுதியில் விழுந்து நொறுங்கியது.

அதில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்திய நிலையில் கடந்த சில ஆண்டுகளில் சூடானில் பல்வேறு விமான விபத்துகள் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பூமியைத் தாக்கும் சிறுகோள்; விஞ்ஞானிகள் எச்சரிக்கை!

2024 லுசு4 என்று பெயரிடப்பட்ட சிறுகோள் 2032 ஆம் ஆண்டில் பூமியைத் தாக்கும் அபாயம் குறித்து விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

அஸ்டிராயிட் டெரெஸ்டிரியல்-இம்பாக்ட் லாஸ்ட் அலர்ட் சிஸ்டம் (ATLAS) விஞ்ஞானிகள், 2024 டிசம்பர் 27 அன்று பூமியிலிருந்து சுமார் 8,29,000 கிலோமீட்டர் தொலைவிலிருந்து இந்த சிறுகோள் பூமியை நோக்கி வருவதாகக் கண்டறிந்தனர்.

இந்த சிறுகோள் தற்போது பூமியிலிருந்து 27 மில்லியன் மைல்கள் தொலைவில் சூரியக் குடும்பத்தைச் சுற்றி நகர்ந்துகொண்டிருக்கிறது.

சுமார் 196 அடி விட்டம் கொண்ட



இந்த 2024 லுசு4 சிறுகோள் 2032 ஆம் ஆண்டில் பூமியைத் தாக்க 1.2 சதவீதம் (1-in-83) வாய்ப்பிருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

2028 ஆம் ஆண்டில் இந்த சிறுகோள் பூமிக்கு மிக அருகில் வரும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

2024 லுசு4 சிறுகோள் பூமியைத் தாக்கினால், பூமியின் மீது சுமார் 8 மெகா டன் ஆற்றலை வெளிப்படுத்தும் என்று நாசா கணித்துள்ளது.

இது 1945ல் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டு ஆற்றலை விட 500 மடங்கு அதிகமாகும்.

சிறுகோளின் பாதையை நகர்த்த விஞ்ஞானிகள் விண்வெளியில் வைத்து மோதலை ஏற்படுத்தும் திட்டத்தைப் பரிசீலித்து வருகின்றனர்.

இப்போது, 2024 YR4 சிறுகோளைக் கவனமாகக் கண்காணித்து வரும் ஆய்வாளர்கள், 2032 இல் அதன் தாக்கம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

# செர்பிய பிரதமர் பதவி விலகல்!



செர்பிய பிரதமர் மிலோஸ் வுசெவிக் (Milos Vucevic) கடந்த செவ்வாயன்று தனது பதவியை இராஜினாமா செய்தார்.

2024 நவம்பரில் ரயில் நிலையத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட பல மாதங்களான வெகுஜன போராட்டங்களைத் தொடர்ந்து அவர் பதவி விலகினார்.

செர்பியாவின் வடக்கு நகரமான நோவி சாடில் உள்ள ரயில் நிலையத்தில் 15 பேரின் உயிரை பறித்த பயங்கர பேரழிவை அடுத்து பால்கன் நாடு வழக்கமான போராட்டங்களால் அதிர்ந்தது.

இந்த விபத்து செர்பியா முழுவதும் ஊழல் மற்றும் கட்டுமானத் திட்டங்களில் மேற்பார்வையின்மை காரணமாக நீண்டகால கோபத்தைத் தூண்டியது.

மாணவர்கள் போராட்டங்களை முன்னின்று நடத்தி, தினசரி போக்குவரத்தை நிறுத்தி, பல மாதங்களாக பல்கலைக்கழகங்களை முற்றுகையிட்டனர்.

கடந்த வெள்ளியன்று, பல செர்பியர்கள் பொது வேலைநிறுத்தத்திற்கான அழைப்பின் பிரதிபலிப்பாக பிரதமர் மிலோஸ் வுசெவிக்கின் பதவி விலகல் வந்துள்ளது.

இந்த நிலையில், செவ்வாய்கிழமை தாமதமாக ஒரு தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி அலெக்சாண்டர் வூசிக், நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதா அல்லது புதிய அரசாங்கத்தை அமைப்பதா என்பது குறித்து அடுத்த 10 நாள்களுக்குள் முடிவு எடுப்பதாகக் கூறினார்.

நோவி சாட் சம்பவம் தொடர்பாக பத்துக்கும் மேற்பட்டோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதில் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் கோரன் வெசிக் உள்ளிட்டோர் அடங்குவர்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.01.2025




உங்கள் லட்சியங்களை பூர்த்தி செய்து கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் மிகப் பெரிய வெற்றியை காண்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்கான முறையில் கவனமாக ஆற்றுவீர்கள். இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க நீங்கள் முயல வேண்டும். இதன் மூலம் உறவில் அன்பும் இதமும் உருவாகும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று பண லாபம் காண புதிய முதலீடுகளில் பங்கு கொள்வது சிறந்தது.

இன்று நீங்கள் துடிப்புடன் செயல்படுவீர்கள்.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும் நாள். சூழ்நிலைகள் உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் தைரியத்துடனும் உறுதியுடனும் இருப்பீர்கள்.

இன்று விரைந்து வேலையை முடிக்க வேண்டும் என்று முனைவீர்கள். இதனால் நல்ல தரத்துடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களது வங்கியிருப்பு கணிசமாக உயரக் காண்பீர்கள். கையிலுள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வது நல்லது.

உங்களின் மன தைரியம் காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. இன்று சில எதிர்பாராத நன்மைகள் நடக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாகப் பணியாற்றுவதற்கு இன்று பொறுமை அவசியம்.

உங்கள் அகந்தைப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனால் புரிந்துணர்வும் பாதிக்கப்படும். எனவே அகந்தைப் போக்கை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது. சிறந்த இசையைக் கேட்பது உங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தரும்.

பணியிடச் சூழல் இன்று அனுகூலமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகள் சுமூகமாக நடக்க சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகச் செய்யும் செலவாக இருக்கும்.





இன்று உங்கள் வளர்ச்சிக்கு சாதகமான நாள். இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். ஆன்மீக ஈடுபாடு நன்மை பயக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமையைப் பயன்படுத்தி பணியாற்ற வேண்டும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

இன்றைய நாளை மகிழ்ச்சியான நாளாக ஆக்கலாம். பயணங்கள் மூலம் இது சாத்தியம். உங்கள் துணையுடன் நேர்மையாக விசுவாசமாக நடந்துகொள்ள இது தக்க சமயம்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று கடினமான சூழல் காணப்படும். நீங்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்குத் தள்ளிப் போடவும்.

உங்கள் எதிர் காலம் குறித்த தேவையற்ற பயம் காரணமாக பணியிடத்தில் பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அமைதியாகவும் உற்சாகத்துடனும் பணியை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது இருவருக்குமிடையிலான நல்லுறவையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

வீட்டின் புனரமைப்புக்காக அல்லது புதுப்பிப்பதற்காகப் பணம் செலவு செய்வீர்கள். பணம் சேமிக்கும் வாய்ப்புக் குறைவாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன் கிட்டாது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பிரார்த்தனை மற்றும் ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது பொறுமை தேவை. உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில தொந்தரவுகளை எதிர் கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது இருவருக்குமிடையிலான நல்லுறவையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. பண வரவு காணப்பட்டாலும் தொடர்ந்து செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் பணம் சேமிக்கும் வாய்ப்பு குறைந்து காணப்படும். முறையாகத் திட்டமிட வேண்டியது அவசியம்.




உங்கள் இலக்குகளை அடைவதில் இன்று தாமதம் ஏற்படும். எனவே உங்கள் இலக்குகளைச் சிறப்பாகத் திட்டமிட வேண்டியது அவசியம். இன்று சில மாற்றங்கள் ஏற்படும். அனால் அவை முழு அளவில் நன்மை அளிக்காது.

பணியிடத்தில் பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழல் சவாலானதாக இருக்கும். பக்குவமான மனநிலையில் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் பெரிதாக நோக்கும் மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் வேறுபாடு ஏற்படும். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இந்தப் போக்கைத் தவிர்க்க வேண்டும்.

இன்று சில கூடுதல் செலவுகள் காணப்படும். பண வரவை ஏற்படுத்த அதிர்ஷ்டம் அனுகூலமாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 30.01.2025




இன்று பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகமான மனநிலை காரணமாக அவருடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்துகொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். பணத்தை சுப காரியங்களுக்கு செலவு செய்யும் வாய்ப்பு உள்ளது.

இன்று தைரியமாகவும் உற்சாகமாகவும் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. எதிர்காலம் குறித்த கவலையும் பயமும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் சிறந்த பலன் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி திறமையாக சவால்களை கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான இனிமையான உணர்வு கொள்ள வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் பாதுகாப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் இடையிலான உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பண வரவு காணப்படாது.




இன்று மகிழ்ச்சியான உற்சாகமான தருணங்கள் காணப்படும். உங்கள் சுய முயற்சி மூலம் நீங்கள் வளர்ச்சி காண்பீர்கள். இன்று வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் காணப்படும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். ஒழுங்கு முறையான அணுகுமுறை உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் உண்மையான அன்பை வெளிப்படுத்தி மகிழ்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களின் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய சூழல் அதிருப்தியை அளிக்கும். அதிகமான சிந்தனையைத் தவிர்க்க வேண்டும். சமநிலையோடு இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் விரும்பத்தகாத சூழல் காணப்படும். எனவே பணியிடத்தில் ஒழுங்குமுறையுடன் பணியாற்ற வேண்டியது நல்லது.

உங்கள் துணையுடன் குழப்பமான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். அதனை தவிர்த்து உற்சாகமாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்.

இன்று பண இழப்பை சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தைக் கையாளும் போது கூடுதல் கவனம் தேவை.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

# பனை அபிவிருத்திச்சபைத் தலைவருக்கு வெள்ளவத்தை பொலிஸ் அழைப்பாணை

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பங்கேற்க விடாமல் தடுக்க சதி எனக் குற்றச்சாட்டு

(த.சுபேசன்)

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவனுக்கு வெள்ளவத்தைப் பொலிஸார் அழைப்பாணை விடுத்துள்ள நிலையில், தன்னை யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்குபற்ற விடாமல் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சதி இதுவென அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பனை அபிவிருத்திச்சபையின் தலைவராகக் கடந்த மூன்று மாத காலங்களுக்கு முன்னர் வி.சகாதேவன் நியமிக்கப்பட்ட நிலையில் அவர் கடந்த காலத்தில் சபையில் இடம்பெற்றிருந்த ஊழல்களை வெளிச்சமிட்டுக் காட்டியிருந்தார்.

இந்நிலையிலேயே பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் மீது முன்னாள் தலைவர் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் அவதூறு வழக்கொன்றைப் பதிவு செய்திருந்தார்.



மேற்படி முறைப்பாட்டிற்கு அமைவாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவரை எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி பங்கேற்கும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் என்னைக் கலந்து கொள்ள விடாமல் தடுக்கும் சதிச் செயற்பாடு இது.

நான் எவர் மீதும் அவதூறு கூறவில்லை.

கடந்த காலங்களில் சபையில் இடம்பெற்றிருந்த ஊழல்கள் தொடர்பிலேயே சுட்டிக்காட்டினேன்.

அந்த ஊழல்கள் தொடர்பான ஆதாரங்களை திரட்டி வருகிறேன். ஆனால் அவற்றை மறைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதுடன், என் மீது பொய்யாக வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் முன்னாள் தலைவர் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிடம் இலஞ்சம் கோரியமை நிரூபணமாகியுள்ளது. அது தொடர்பில் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.